# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்
# Annai Poopathi Tamil Cultural Centre



## புதிய கல்வி ஆண்டில்
# புதிய சிந்தனைகளோடு தமிழ்க் கல்வி செய்வோம்!

**அ**ன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம் புதிய கல்வி (2022) ஆண்டில் அடுத்துக்கட்ட வளர்ச்சிப்பாதையை நோக்கி சிந்திக்கின்ற இவ் வேளையில் எமது அன்னை நிர்வாகிகள் ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைத்துப் பணியாளர்களையும் அன்புடன் வரவேற்பதில் அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம் பெருமகிழ்ச்சியடைகின்றது.

ஒவ்வொரு கல்வி ஆண்டின் தொடக்கத்தில், நிறைந்த கனவுகளோடும், புதிய பரிமாணத்தோடும் எமது அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம் புத்துயிர் பெற்று எமது கல்வி வளர்ச்சிக்கான ஊட்டச்சத்தாய் உருவெடுத்து நிற்கின்றது. இதற்குக் காரணமானவர்கள் ஆசிரியர்களும் பணியார்களும்தான் என்பது யாவரும் அறிந்ததே!

கடந்த கல்வியாண்டில் தன்முனைப்போடும் ஆசிரியர்களின் வழிகாட்டுதலோடும் கற்றுக் கொண்டதையும் கடந்து, புதிய கல்வியாண்டில் உற்சாகத்தோடும், நம்பிக்கையோடும், தமது அறிவுவேருக்கு நீருற்றிக் கொள்ள ஆர்வமாக காத்திருக்கும் மாணவர்களையும், தமிழ்க்கல்விக்கு மென்மேலும் வலுசேர்த்து உலகத்தரத்தில் எமது அன்னையை முன்வரிசையில் அமர வைக்க அறப்பணியாற்றி வரும் ஆசிரியர்களையும் நிருவாகிகளையும் அன்போடு வரவேற்பதில் நாம் பெருமகிழ்வு கொள்கிறோம்!

உலகளவில் கல்விச் சூழலில் பல புதிய மாற்றங்கள் நடந்தேறுகிறது. எனவே நாமும் அதற்கேற்றவாறு நம்மை மாற்றிக் கொள்ளுதல் அவசியமாகின்றது. தமிழர் மரபு வழியில் நமது கல்வியை நவீன கல்வியியல் தரத்திற்கேற்றவாறு மாற்றியமைத்து நமது தமிழ்க்கல்வியை தரம் உயர்த்த நாம் கூடுதலாக உழைக்க வேண்டும். கற்பித்தலில், கற்றலில், புதிய அணுகுமுறையை கடந்த கல்வியாண்டிலிருந்து கையாளுகின்றோம். ஆனாலும் இன்னும் கூடுதலாக மெருகேற்ற முனையவேண்டும்.

இந்தக் கல்வியாண்டில் அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம் பல்வேறு செயல் திட்டங்களோடு அடியெடுத்து வைக்கிறது. அதில் செயல்முறைக்கல்வியில் சிறந்து விளங்கும் வகையில் மாணவர்கள் இலகுவாக கற்றுக்கொள்ள வழிவகை செய்ய ஆசிரியர்கள் முன்வரவேண்டும். அதற்கு எமது நிருவாகம் உறுதுணையாக நிற்கும்.

மாணவர்களுக்கு கல்விக்கூட தேர்வு நூல்களைக் கடந்து, அறிவாற்றலை வளர்க்கும் நோக்கில் நூல்களைப் படிக்க, சமூக அறிவை பெருக்க, வாசிப்பு திறன் பெற ஊக்கப்படுத்துதல் வேண்டும். எதிர்கால அறிவுநெறிமுறையை விரிவுப்படுத்த வேண்டி செயல்வடிவ நூல்களையும் கலைவடிவ நூல்களையும் கதைவடிவ நூல்களையும் தமிழ் விளையாட்டு நூல்களையும் ஏற்கனவே நாம் வெளிக்கொண்டு வந்திருக்கிறோம்.

அதே போல் இக் கல்வி ஆண்டில் கணினி வழியாகவே முழுதும் கற்றுணரவும் மேலும் தம்மை மேம்படுத்திக் கொள்வதற்குமான பணிகளில் அன்னை பூபதி தமிழ்க்கலைக் கூடம் முனைப்போடு வழிகாட்டிநிற்கும். இந்தப் பெரும் முயற்சிகளுக்கு தன்னலமற்ற ஆசிரியர்களின் புரிந்துணர்வுடன் கூடிய உழைப்பால், அது சாத்தியமாகும்.

அதில்,

- தட்டச்சில் தமிழ் எழுதுவதற்கான செயற்பாடுகளை 5ஆம் ஆண்டு மாணவர்களில் இருந்து ஆரம்பித்தல். நோர்வே உயர்தர தமிழ் மொழித்தேர்வு இனிவரும் காலங்களில் கணணியில் மட்டுமே நடை பெறவுள்ளதால் இதில் நாம் கூடுதல் கவனம்செலுத்தவேண்டும்.

- காலம் வேகமாக ஓடிக்கொண்டிருக்கின்றது, எனவே இளைய ஆசிரியர்களை வளர்த்தெடுத்து, மேல்வகுப்புகளையும் கற்பிக்கக்கூடியவர்களாக உருவாக்க வேண்டியது இன்றைய நிகழ் காலத்தின் கட்டாய தேவையாக இருக்கின்றது.

- கடந்த 30ஆம் ஆண்டுவிழா மிகப்பிரமாண்டமாக நடைபெற்றது. அவ்வகையில் வளாகங்களில் இருந்து பலர் கூடிக் குலாவி களித்து மகிழ்ந்தது அன்னையின் இணைந்த கட்டமைப்பு செயல்பாட்டிற்கு மகுடம் சூட்டியது. இன் நிகழ்வானது நோர்வேயில் காலத்தின் ஒரு பெரும் பதிவாக என்றும் நிலைத்து நிற்கும். ஆயினும் ஆண்டுவிழாவில் நிருவாகிகள், ஆசிரியர்கள், மதிப்பளிப்பை நாம் விரும்பியது போன்று திறம்பட நடத்த முடியாது போனதை நினைத்து மனம் வருந்துகிறோம். கால மணித்துளிகளுடன் நாம் போராடி ஏனைய நிகழ்வுகளையும் விரைந்து நடத்தி முடிக்கவேண்டும் எனும் சூழ்நிலையையில் நாம் இருந்ததைப் புரிந்து கொண்டு எம்மோடு ஒத்துழைத்து 30ஆம் ஆண்டுவிழாவை சிறப்பித்த அனைவருக்கும் பாராட்டுக்களையும் நன்றிகளையும் இவ் வேளையில் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னை பூபதி தமிழ்க கலைக்கூடம் எமது மக்கள் ஆதரவோடு உருவெடுத்ததன் நோக்கம் புலம் பெயர்ந்து வாழும் எமது எதிர்கால பிள்ளைகளுக்கு மொழி ரூ இனம் ரூ பண்பாடு - வரலாறு ஆகியவற்றை கற்றலின் வாயிலாக கையளிப்பதற்காகவே. அதுவே எமது முகாமையான உயர்ந்த கொள்கையும் ஆகும்.

இந்த உயர்ந்த கல்வியியல் கனவை நெஞ்சில் ஏந்தும் அறிவுப் பட்டறையாக அன்னை பூபதி தமிழ்க்கலைக் கூடம் என்றும் திகழும். இக்கல்வியியல் களத்தில் ஆற்றல் மிகுந்தவர்களாக திகழும் ஆசிரியர்கள், பணியாளர்கள், பலர் உள்ளார்கள் என்பதை ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் நாங்கள் கண்டுணர்கிறோம். எம் நிருவாகத்தின் வளர்ச்சிப்பாதைக்கு அவர்களே கைவிளக்கேந்தி நின்று வழிகாட்டுகிறார்கள்!

எமது கல்விக் கட்டமைப்பினை கட்டிக்காத்து, அதற்கு வலுச்சேர்த்து, உறுதியோடு கடைப்பிடித்து, அதன் வளர்ச்சிப்பாதைக்கு தொடர்ந்து நாம் அனைவரும் ஒருசேர்ந்து உழைத்துநிற்போம்!

“தமிழ் எங்கள் அடையாளம்”

– தலைமை நிர்வாகம் –

அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் – நோர்வே